MediaLiteracyCouncilSG
www.betterinternet.sg



## சாமர்த்தியமாக இருங்கள்



# போலிச் செய்திகளை உருவாக்கும் முறைகள்





## இணையத்தில் சரியானதைக் கடைப்பிடியுங்கள்

- செய்தி தோன்றுவதற்கான அடிப்படை (மூலம்) பற்றிக் கேள்வி கேளுங்கள்
- தகவலை உறுதிப்படுத்துங்கள்
- நிபுணர்களுடன் சரிபாருங்கள்

**CHECK Please!**
Be Safe. Be Smart. Be Kind.

Organised by: MEDIA LITERACY COUNCIL

Supported by: INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

In association with: SG:D | GET READY!

நம்புவதற்கு,
சொடுக்குவதற்கு முன்னால்

# தயவுசெய்து சரிபாருங்கள்!

**போலிச்செய்திகளை உருவாக்க பயன்படுத்தும் உத்திகள் குறித்தும் இணையவெளியில் உங்களைக் காத்துக் கொள்வது குறித்தும் அறியுங்கள்.**

## 01 புகைப்படத்தை திரிப்பது

கொஞ்சம் கூட அசல் புகைப்படத்தைப் போல இல்லாத அளவிற்கு புகைப்படங்கள் முற்றிலும் மாற்றப்படுகின்றன. ஏதேனும் சந்தேகத்திற்குரிய போலிப் புகைப்படத்தை நீங்கள் பார்த்தால் உடனே அந்தப் படத்தின் மூலத்தை, அது இடம்பெறும் கட்டுரையைக் கண்டடையுங்கள். கூகலில் அல்லது டின்ஐயில் தலைகீழ்ப்படத்தை உருவாக்கி சரி பாருங்கள்.

## 02 போலிக் காணொளிகள்

அரசியல்வாதிகள், நடிகர்கள் சொல்லாததைச் சொல்வது போல உருவாக்கப்பட்ட அதிமான போலிக் காணொளிகள் அண்மையில் வருகின்றன. அந்தக் காணொளிகளின் தலைப்பை வைத்து அது எங்கிருந்து வந்ததென்று தேடிப் பார்த்துவிட்டு அவற்றின் உண்மைத்தன்மை பற்றி முடிவெடுங்கள்.

## 03 திசைதிருப்பும் தகவல்

எண்கள் பெரும்பாலும் பொய்சொல்வதில்லை என்றாலும் மக்கள் பொய்யான எண்களை உண்மையாக எடுத்துக் கொள்வதுண்டு. உதாரணத்துக்கு, அன்றாடம் 80 விழுக்காட்டு சிங்கப்பூரர்கள் விரைவு உணவு உட்கொள்கின்றனர் என்று ஓர் ஆய்வு கூறலாம். ஆனால், அந்த ஆய்வில் 10 பேர் மட்டுமே பங்கேற்றிருப்பர். இது தேசிய அளவிலான மாதிரியாகக் கொள்வதற்கில்லை. யார் எண்களை அளிக்கின்றார் என்பதை அறியும் வேளையில் ஆய்வின் மாதிரி அளவைக் கணக்கில் கொள்ளத் தவற வேண்டாம்.

## 04 அநாமதேய நிபுணர்கள்

இந்தப் போலி நிபுணர்கள் உண்மையைப் போலவே தெரிவர். ஆனால், பெரும்பாலும் இவர்களுக்கு உண்மையான, நம்பிக்கையான பின்னணி இருப்பதில்லை. உதாரணத்துக்கு, “3 பட்டக்கல்வித் தகுதிகள் உள்ள நிபுணன் நான்,” என்று கூறினாலும் அவருக்கு ஒரு பட்டக் கல்வி கூட இல்லாதிருக்கலாம். அல்லது, இலக்கியத்தில் 3 பட்டப்படிப்பு இருக்கலாம். நம்பகத்தன்மையற்றவர் என்பதற்கு இதுவும் நல்ல சான்று.

## 05 போலி, திரிக்கப்பட்ட தகவல்கள்

இணையவெளியில் போலிச்செய்திகள், பொய்த் தகவல்கள், சொல்லாத செய்தியைச் சொன்னதாகத் திரிக்கும் உண்மைத் தகவல்கள் இரண்டையும் நம்பி இயங்குபவை. அதையே கூறும் பிற நம்பத் தகுந்த, முழுமையான, துல்லிய செய்தியமைப்புகளைல்கும் செய்திமூலங்களில் சோதிக்கவும்.

